HDFC ERGO




# நீண்ட கால
# டூ வீலர்
# பேக்கேஜ் பாலிசி

**தவிர்க்க முடியாத நிகழ்வுகளில் இருந்து பாதுகாக்க உங்கள் டூ வீலரை இன்சூர் செய்க**

BR\Ver-1 FEB2021

வாகனம் என்பது நம் அனைவருக்குமே மதிப்புக்குரிய உடைமைகளில் ஒன்றாக விளங்குகிறது. எச்டிஎஃப்சி எர்கோ மோட்டார் இன்சூரன்ஸ் மூலம், இத்தகைய மதிப்புமிக்க உங்கள் வாகனத்தை எதிர்பாராத சூழ்நிலைகளில் இருந்து எளிதில் பாதுகாத்துக் கொள்ளலாம். பொதுவாக பாரம்பரிய மோட்டார் பாலிசியானது ஆண்டு காலத்திற்கான காப்பீட்டை வழங்குகிறது. ஆனால், **எச்டிஎஃப்சி எர்கோ லாங் டேர்ம் டூ வீலர் பாலிசி** யானது, உங்கள் தேவைகளுக்கு ஏற்றவாறு பல ஆண்டுகளுக்கு உங்கள் விலைமதிப்பற்ற உடைமைக்குக் காப்பீட்டை வழங்குகிறது. இப்போது, மூன்று ஆண்டுகள் வரை வருடாந்திர புதுப்பித்தல்கள் குறித்து நீங்கள் கவலைப்படாமல் இருக்கலாம். ஆம், நீங்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை புதிப்பித்தால் போதும். எங்களின் சேவையானது இந்தியா முழுவதும் உள்ள அங்கீகரிக்கப்பட்ட வொர்க்ஷாப்ஸ் மற்றும் எண்ட் டு எண்ட் ஆட்டோமேட்டட் செயல்முறைகளால் ஆதரிக்கப்படுகிறது. அதனால் இது விரைவான கிளைம் செட்டில்மெண்ட்டிற்கு வழிவகுக்கிறது. உங்கள் வாகனத்திற்கு என்ன ஆனாலும் சரி, விரைவாக நீங்கள் ஓட்டுநர் இருக்கைக்குத் திரும்பி முன்பைப் போல் வாகனத்தை ஓட்ட இது பக்க பலமாக அமைகிறது.

## முக்கிய அம்சங்கள்

NCB

**என்சிபி தள்ளுபடியானது பல ஆண்டுகளுக்கு பாதுகாப்பாளராக செயல்படும்**

**ஒரே பரிவர்த்தனையில் 2 அல்லது 3 வருடத்திற்கான நீண்ட கால காப்பீட்டை வாங்குவதற்கான விருப்பம்**

**1782+ மேற்ப்பட்ட கராஜ்களுக்கான பணமில்லா அணுகல்**

24

**24 X 7 கிளைம் செய்வதற்குத் தேவையான உதவி மற்றும் வாடிக்கையாளர் ஆதரவு**

**ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்க வேண்டிய தொந்தரவு இருக்காது**

## தகுதி

இது அனைத்து இரு சக்கர வாகன உரிமையாளர்களுக்கும் வழங்கப்படும் ஒரு புராடக்ட் ஆகும். இதில் உங்கள் விருப்பத்திற்கேற்ப இரண்டு அல்லது மூன்று வருட காலத்திற்கு பாலிசியை வாங்கிக் கொள்ளும் ஆப்ஷன் உள்ளது.

## என்னென்ன அடங்கும்

### பின்வரும் காரணங்களால் வாகனத்திற்கு ஏற்படும் சொந்த சேதம் இதில் அடங்கும்:

- வெளிப்புற விபத்துக்கள்
- திருடுதல், வீடு புகுந்து கொள்ளையடித்தல் அல்லது மோசடி செய்தல்
- தீ, குண்டுவெடிப்பு, சுய-பற்றவைப்பு, மின்விளக்குகள்
- தீவிரவாதம், கலவரம், வேலைநிறுத்தம் அல்லது ஏதேனும் தீங்கு விளைவிக்கும் செயல்
- சாலை, ரயில், உள்நாட்டு நீர்வழி, லிப்ட் மூலம் போக்குவரத்து செய்யப்படுதல்
- நிலநடுக்கம், வெள்ளம், புயல், நிலச்சரிவு, பாறை சரிவு

வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளருக்கு தனிநபர் விபத்து காப்பீடு (பர்சனல் ஆக்சிடன்ட் கவர்). பயணிகள் மற்றும் ஊதியம் பெறும் ஓட்டுநர்களும் தனிநபர் விபத்துக் காப்பீட்டை தேர்வு செய்யலாம்.

### தேர்டு பார்ட்டி லீகல் லையபிலிட்டி:

வாகனத்தைப் பயன்படுத்தி பின்வருவன நேர்ந்தால், அதன் காரணமாக எழும் எந்தவொரு சட்டப் பொறுப்புக்கும் இது பாதுகாப்பு வழங்குகிறது:

- ஏதேனும் மூன்றாம் தரப்பினருக்கு விபத்து காரணமாக ஏற்படும் மரணம் / காயம்
- மூன்றாம் தரப்பினருக்குச் சொந்தமான சொத்துக்களுக்கு ஏற்படும் சேதம்

**உங்கள் பாலிசியில் பின்வருவன அடங்கும்:**

வண்டியை கட்டி இழுப்பதற்கான செலவை, 300 வரை அல்லது அசல் தொகையை, விபத்தைப் பொறுத்தமட்டில் இவ்விரண்டில் எது குறைவாக உள்ளதோ, அதனை ரீஇம்பர்ஸ்மெண்ட் செய்து கொள்ளலாம்.

## எதற்கு பாதுகாப்பு அளிக்கப்படாது

- பொதுவான ஏஜிங், தேய்மானம் மற்றும் டியர்
- செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனம் ஓட்டும் நபரால் விளையும் சேதம்
- இயந்திர அல்லது மின் முறிவு, செயலிழப்பு
- மதுபானம் அல்லது போதைப்பொருளை உட்கொண்டு வாகனம் ஓட்டுபவரால் ஏற்படும் சேதம்
- தேய்மானம், ஏதேனும் விளைவாக ஏற்படும் இழப்பு
- போர், கலகம், அணுசக்தி சார்ந்த அபாயங்கள் ஆகியவற்றால் ஏற்படும் இழப்பு/சேதம்
- விபத்தின் போது சேதமடையாத பட்சத்தில், டயர்கள் மற்றும் டியூப்களுக்கு உண்டாகும் சேதம்
- இந்தியாவிற்கு வெளியே அதாவது வெளிநாட்டில் ஏற்படும் இழப்பு/சேதம்

## நோ கிளைம் போனஸ் ப்ரொடக்ஷன்

என்சிபி ஆனது பாலிசி காலத்தில் பாதுகாக்கப்படுகிறது, காப்பீடு செய்யப்பட்டவர் பாலிசி காலத்தின் போது சொந்த சேதம் பகுதி இழப்பு கிளைமை பதிவு செய்யும் பட்சத்தில், கூடுதலாக நோ கிளைம் போனஸ் மீட்பு இருக்காது. எவ்வாறாயினும், பாலிசியின் முழு காலம் நிறைவடைந்த பின்னர், முந்தைய இந்திய மோட்டார் கட்டணம் 2002-ன் படி, 12 மாதங்களுக்கான கிளைம் ஃப்ரீ காலத்திற்கான ஒவ்வொரு நிறைவுபெற்ற மற்றும் தொடர்ச்சியான புதுப்பித்தலுக்கான நோ கிளைம் போனஸுக்கு காப்பீடு செய்யப்பட்டவர் தகுதி பெறுவார். கீழே உள்ள அட்டவணைகள் லாங் டேர்ம் டூ வீலர் பேக்கேஜ் பாலிசிக்கான புதுப்பித்தலில் என்சிபி எலிஜிபிலிட்டியை விளக்குகின்றன.

| இரண்டு வருட லாங் டேர்ம் பாலிசி | | |
|---|---|---|
| நுழைவின் போது என்சிபி | பதிவு செய்யப்பட்ட கிளைம்கள் | புதுப்பித்தலில் என்சிபி எலிஜிபிலிட்டி |
| 0% | முழு பாலிசி காலத்திலும் எந்த கிளைம்களும் செய்யப்படவில்லை | 25% |
| 0% | 0 முதல் 12 மாதங்கள் வரையில் செய்யப்பட்ட கிளைம்கள், ஆனால் 12 முதல் 24 மாதங்கள் வரையில் எந்த கிளைமும் செய்யப்படவில்லை | 20% |
| 0% | 12 முதல் 24 மாதங்கள் வரையில் செய்யப்பட்ட கிளைம்கள் | 0% |

| மூன்று வருட லாங் டேர்ம் பாலிசி | | |
|---|---|---|
| நுழைவின் போது என்சிபி | பதிவு செய்யப்பட்ட கிளைம்கள் | புதுப்பித்தலில் என்சிபி எலிஜிபிலிட்டி |
| 0% | முழு பாலிசி காலத்திலும் எந்த கிளைம்களும் செய்யப்படவில்லை | 35% |
| 0% | 0 முதல் 12 மாதங்கள் வரையில் செய்யப்பட்ட கிளைம்கள், ஆனால் 12 முதல் 24 மாதங்கள் வரையில் எந்த கிளைமும் செய்யப்படவில்லை | 25% |
| 0% | 12 முதல் 24 மாதங்கள் வரையில் செய்யப்பட்ட கிளைம்கள், ஆனால் 24 முதல் 36 மாதங்கள் வரையில் எந்த கிளைமும் செய்யப்படவில்லை | 20% |
| 0% | 24 முதல் 36 மாதங்கள் வரையில் செய்யப்பட்ட கிளைம்கள் | 0% |
| 0% | முழு பாலிசி காலத்திலும் எந்த கிளைம்களும் செய்யப்படவில்லை | 35% |

திருட்டு அல்லது ஆக்கபூர்வமான மொத்த இழப்பு காரணமாக ஒருவர் வண்டியை முழுமையாக இழந்து விடும் பட்சத்தில், வாகனம் மற்றும் பாலிசி இல்லாததால் என்சிபி பொருந்தாது.

## டிடக்டபிள்

இந்த பாலிசியின் பிரிவு 1-ன் கீழ் (காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தின் இழப்பு அல்லது சேதம்) உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலக்கு தொடர்பான ஒவ்வொரு கிளைமுக்கும் நிறுவனம் பொறுப்பேற்காது.

## கிளைம் செயல்முறை

இந்த பாலிசியின் பிரிவு - 1ன் கீழ் (காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தின் இழப்பு அல்லது சேதம்) உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலக்கு தொடர்பான ஒவ்வொரு கிளைமுக்கும் நிறுவனம் பொறுப்பேற்காது.

காப்பீடு செய்யப்பட்ட நிகழ்வின் காரணமாக இழப்பு ஏற்பட்டால், காப்பீட்டு நிறுவனத்திற்கு உடனடியாகத் தெரியப்படுத்த வேண்டும்.

எங்கள் தொடர்பு விவரங்கள் பின்வருமாறு: வாடிக்கையாளர் சேவை எண்: 022 - 6234 6234 / 0120 - 6234 6234

பொறுப்புத் துறப்பு: மேலே குறிப்பிடப்பட்டுள்ள விவரத்தில் வழங்கப்படக் கூடிய காப்புறுதி பற்றிய குறிப்பு மட்டுமே உள்ளது. ஆகையால், தயவுசெய்து கவரேஜின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் அது தொடர்பான விலக்குகளுக்கான கொள்கை ஆவணத்தைப் படிக்கவும்.

## தள்ளுபடி விலக்கு (காப்பீட்டுச் சட்டத்தின் பிரிவு 41, 1938-யில் திருத்தப்பட்டது

1. இந்தியாவில் உள்ள ஏதேனும் உயிர்கள் அல்லது உடைமைகள் சார்ந்த எந்த விதமான இடர் தொடர்பான இன்சூரன்ஸ் பாலிசியை எடுக்கவோ அல்லது புதுப்பிக்கவோ அல்லது தொடரவோ, ஒரு நபருக்கு தூண்டுதலாக, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, எந்தவொரு நபரும் அனுமதிக்கவோ அல்லது வழங்கவோ கூடாது. அதே போல் செலுத்த வேண்டிய கமிஷனின் ஒரு பகுதி அல்லது பாலிசியில் காட்டப்பட்டுள்ள பிரீமியத்தின் ஏதேனும் தள்ளுபடி, அல்லது பாலிசியை எடுக்கும் அல்லது புதுப்பிக்கும் அல்லது தொடரும் எந்தவொரு நபரும், இன்சூரரால் வெளியிடப்பட்ட ப்ராஸ்பெக்டஸ் அல்லது அட்டவணையின் படி அனுமதிக்கப்படும் தள்ளுபடியைத் தவிர, எந்தவொரு தள்ளுபடியையும் ஏற்க இயலாது.

2. இந்த பிரிவின் விதிகளுக்கு இணங்க தவறும் பட்சத்தில், எந்தவொரு நபருக்கும் அபராதம் விதிக்கப்படும், இது ₹10 லட்சம் வரை நீட்டிக்கப்படலாம்.

**எச்டிஎஃப்சி எர்கோ ஜெனரல்இன்சூரன்ஸ்கம்பெனிலிமிடெட்**

022 6242 6242 (வாங்க) hdfcergo.com

எச்டிஎஃப்சி எர்கோ மொபைல் ஆப்

^7 ஜூலை 2022 தேதியின்படி அளவுகள் எச்டிஎஃப்சி எர்கோ ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனிலிமிடெட். IRDAI பதிவு எண்:146.CIN:U66030MH2007PLC177117. பதிவுசெய்யப்பட்ட & கார்ப்பரேட் அலுவலகம்: 1வது தளம், எச்டிஎஃப்சி ஹவுஸ், 165-166 பேக்பே ரெக்லேமேஷன், எச். டி. பரேக் மார்க், சர்ச்கேட், மும்பை - 400 020. ஆபத்து காரணிகள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு, பாலிசியை வாங்கும் முன் பாலிசி ஆவணத்தை கவனமாகப் படிக்கவும். மேலே காட்டப்பட்டுள்ள வர்த்தக லோகோ எச்டிஎஃப்சி பேங்க் லிமிடெட் மற்றும் எர்கோ இன்டர்நேஷனல் ஏஜிக்கு சொந்தமானது மற்றும் தகுந்த உரிமத்தின் கீழ் நிறுவனத்தால் பயன்படுத்தப்படுகிறது UIN : நீண்ட கால டூ வீலர் இன்சூரன்ஸ் பாலிசி- பேக்கேஜ் பாலிசி -HDE-MO-P16-77-V01-15-16.UID: 11740